# நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப பெறுதலுக்கான நோய்களின் தொகுப்பு (IMMUNE RESTORATION SYNDROME)



**நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப பெறுதலுக்கான நோய்களின் தொகுப்பு என்றால் என்ன?**

ஏஆர்வி மருந்து எடுக்க ஆரம்பித்த சிலர் HIV கிருமியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும் சில உடல் பிரச்சினைகளை பெற்றிருப்பர். இந்த பிரச்சினையானது முன்பு இருந்ததைவிட அதிகமாக திரும்ப வரும். சில நபர்களுக்கு புதிய வகை சந்தர்ப்பவாத நோய்களும் ஏற்படும். இது நோயெதிர்ப்பு சக்தி பலமாதலுடன் தொடர்புடையது, இது HIV சிகிச்சை ஆரம்பித்த முதல் இரண்டு மாதங்களில் ஏற்படும். இந்த நிலையை நோய் எதிர்ப்பு சக்தி திரும்ப பலமடைதலை தூண்டுகின்ற நோய்களின் தொகுப்பு (IRIS) என்று கூறுவர். இது ஏஆர்வி சிகிச்சையை ஆரம்பிப்பவர்களில் 20% ஏற்படும்.

**இந்த நோய் தொகுப்புகளை எப்படி கண்டறிவது?**

HIV சிகிச்சை ஆரம்பித்த **பிறகு** சில பேர்களுக்கு சைட்டோமேகலாவைரஸ் (CMV) உருவாகும். சைட்டோமேகலாவைரஸ் பற்றிய மேலும் பல தகவல்களுக்கு அத்தியாயம் 504ஐ பார்க்கவும். இதில் சில பேர்களுக்கு HIV சிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன் சைட்டோமேகலாவைரஸால் பாதிக்கப்பட்டு இருப்பதை கண்டறிந்திருக்கமாட்டார்கள்.

HIV சிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன்பு இவர்கள் சைட்டோமேகலாவைரஸால் பாதிக்கப்பட்டிருப்பதை மருத்துவர்கள் முடிவு செய்வார்கள். ஆயினும் சைட்டோமேகலாவைரஸின் செயல்பாடுகளினால் அவர்களின் நோய் எதிர்ப்பு மண்டலம் பலவீனம் அடையும். HIV சிகிச்சை ஆரம்பித்தவுடன் அவர்களின் நோய் எதிர்ப்பு மண்டலம் பலம்பெற்று அது சைட்டோமேகலாவைரஸ்க்கு எதிராக செயல்புரியும். அவர்கள் பார்ப்பதற்கு சைட்டோமேகலாவைரஸால் பாதிகப்பட்ட ஒரு புதிய நோயாளிபோல் காணப்படுவர்.

இந்த நபர்களைப் போலவே மற்றவர்கள் பிற நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பர். இது “ இம்யூன் ரிகாவரி சிண்ட்ரோம்” என்று அழைக்கப்படும். சில நோயாளிகளுக்கு காய்ச்சல் மற்றும் கழுத்தில் வீக்கம் ஏற்படும், இது உடலின் மற்ற பாகங்களிலும் வீக்கத்தை உண்டாக்கக் கூடும். இப்பிரச்சினைகள் ஒருவருக்கு சிடி4 எண்ணிக்கை (அத்தியாயம் 124) அதிக அளவில் உருவானவுடன் அல்லது வைரல் லோட் எண்ணிக்கை (அத்தியாயம் 125) அதிகளவில் குறைந்தவுடன் காணப்படும்.

**நல்ல விஷயங்கள் அல்லது கெட்ட விஷயங்கள்:**

தொற்றையோ அல்லது தொற்றை அதிகப்படுத்துவதையோ ஒருவரும் விரும்புவதில்லை, எப்படியிருந்தும் தொடர்ச்சியான HIV சிகிச்சையினால் நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப பெறுதலுக்கான நோய்களின் தொகுப்புகள் குணமாகும். என்ன நிகழ்ந்தாலும் சின்ட்ரோம் என்ற வார்த்தைக்கு மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இம்யூன் ரீஸ்டோரேஷன் என்பது நோய் எதிர்ப்பு சக்தி பலமாவதற்கான அறிகுறியாகும். இது சில குறிப்பிட்ட சில நோய்களுக்கு எதிராக வேலை செய்வதை காணலாம். இது HIV சிகிச்சைக்கு முன் கிருமிகளுக்கு எதிராக அதிகளவில் வேலை செய்திருக்காது ஏனெனில் நோய் எதிர்ப்பு மண்டலம் மிகவும் பலவீனமானதாக் இருந்திருக்கும்.

**என்ன பிரச்சினைகள் ஏற்படும்?**

“இம்யூன் ரீஸ்டோரேஷன் சின்ட்ரோம்” என்பது கீழ்கண்ட தொற்று அல்லது தொற்றுகளை தூண்டக்கூடிய காரணிகளுடன் தொடர்புடையது.

**சைட்டோமேகலாவைரஸ்:**

இம்யூன் ரீஸ்டோரேஷன் சின்ட்ரோம் என்பதன் முதல் தாக்கம் கண்களில் காணப்படும். இது சைட்டோமேகலாவைரஸ் தொடர்புடையதாகும், இதை ஏற்கனவே குறிப்பிட்டோம்.

**ஹெபடைடிஸ் B & C:**

ஹெபடைடிஸ் B & C உள்ள சில வகையான கேஸ்களில் இதற்க்கு முன் இதை கண்டறிந்திருக்க மாட்டார்கள். அத்தியாயம் 506 மற்றும் 507 ல் ஹெபடைடிஸ் பற்றிய மேலும் பல தகவல்களை அறியலாம்.

**ஹெர்பிஸ் ஜாஸ்டர்(Shingles) மற்றும் திடீரென ஏற்படும் ஹெர்பிஸ் சிம்ப்ளக்ஸ்:**

அத்தியாயம் 509ல் ஹெர்பிஸ் ஜாஸ்டர் பற்றி மேலும் பல தகவல்களை அறியலாம். அத்தியாயம் 508 ல் ஹெர்பிஸ் சிம்ப்ளக்ஸ் (குளிர்ந்த கொப்புளங்கள்) பற்றி அறிந்து கொள்ளலாம்.

**மல்லஸ்கம்:** (Malluscum) (இது தோல் தொற்று)

இதைப்பற்றி அத்தியாயம் 513 ல் அறியலாம்.

**மைக்கோபாக்டீரியம் ஆவியம் காம்ப்ளக்ஸ்:** (MAC)

இந்த சந்தர்ப்பவாத நோய் டிபி நோயுடன் தொடர்புடையதாகும். நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப அடையும்போது இது திடீரென பரவும். மைக்கோபாக்டீரியம் ஆவியம் காம்ப்ளக்ஸ் ஆனது நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப அடையும்போது வழக்கத்திற்கு மாறான அடையாளங்கள் தொன்றலாம். அத்தியாயம் 514ல் மைக்கோபாக்டீரியம் ஆவியம் காம்ப்ளக்ஸ் பற்றிய மேலும் பல தகவல்களைப் பெறலாம்.

Progressive multifocal leukoencephalopathy (PML):

இந்த வைரஸ் மூளை தொற்றைப் பற்றி அத்தியாயம் 516ல் விரிவாக அறியலாம். நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப அடையும்போது PMLன் தொற்று தீவிரமடையலாம்.

**ஸ்வாலன் லிம்ப்னோட்:** (swollen lymph nodes)

இது “லிம்போடினொபதி” என்றும் அழைக்கப்படும், இது பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தி செயல்படும்போது கண்டறியலாம்.

Tuberculosis:

TB பற்றிய மேலும் பல தகவல்களை அத்தியாயம் 518ல் பார்க்கலாம்.

**நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப பெறும்போது ஏற்படும் நோய்தொகுப்புகளுக்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது?**

நோய் எதிர்ப்பு சக்தியை திரும்ப பெறும்போது ஏற்படும் நோய்தொகுப்புகளுக்கு என்று தனியாக எந்தசிகிச்சையும் இல்லை. தொடர்ச்சியான HIV சிகிச்சையால் நோய் எதிர்ப்பு மண்டலம் பலமடைந்து இது பொதுவாக தோனறும் தொற்றுகளை சரி செய்து கொள்ளும். சில பேர்களுக்கு, மருத்துவர்கள் நோய்எதிர்ப்பு மண்டலம் பலமாவதை குறைத்து மெதுவாக அதன் சக்தியை அதிகரிக்கிறார்கள் இதன்மூலம் நோயெதிர்ப்பு சக்தி வலுப்பெறும்போது ஏற்படும் நிகழ்வுகள் தவிர்க்கப்படுகிறது. இது அதிகமாக HIV சிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன்பு மிகவும் குறைந்த அளவு சிடி4 எண்ணிக்கை உள்ள நபர்களிடையே முயற்சி செய்யப்படுகிறது.

நோயெதிர்ப்பு சக்தியின் எதிர் நிகழ்வுகள் பிரெட்னிசோன் (Prednisone) போன்ற ஸ்டிராய்டு மருந்துகளை பயன்படுத்தும்போது குறைக்கப்படுகிறது. இது நோயெதிர்ப்பு சக்தி வலுவடையும்போது ஏற்படும் எரிச்சலை குறைக்கிறது.

**அடிப்படை வரையறைகள்:**

இம்யூன் ரீஸ்டோரேஷன் சின்ட்ரோம் ஆனது HIV சிகிச்சையை நோயெதிர்ப்பு மண்டலம் பலகீனமாக இருக்கும்போது தொடங்குவதால் ஏற்படும். அவர்களுடைய நோயெதிர்ப்பு சக்தி விரைவாக திரும்ப அடைந்தால்(அதிக அளவிலான CD4 செல்கள் மற்றும் குறைந்த அளவு வைரஸ் எண்ணிக்கை) அது உடலில் ஏற்கனவே இருக்கும் கிருமிகளுக்கு எதிராக அதிகமாக செயல்புரியும். இது பலவிதமான எரிச்சல்களை ஏற்படுத்தும்.

பலவிதமான சந்தர்ப்பவாத நோய்கள் நோய் எதிர்ப்பு சக்தி திரும்ப பெறுதலுடன் தொடர்புடையது.

இந்த நோய்களின் தொகுப்பு நோய் எதிர்ப்பு மண்டலம் வலுவடைதற்கான அறிகுறிகளாகும். பொதுவாக இதற்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. தொடர்ச்சியான HIV சிகிச்சை இந்த பிரச்சினைகளை தீர்க்கும். சில கேஸ்களில் நோயெதிர்ப்பு மண்டலம் வலுப்பெறுவதை குறைப்பதற்காக ஸ்டிராய்டு பயன்படுத்தப்படுகிறது, இதன் மூலம் அதன் எரிச்சல் குறைக்கப்படுகிறது.

Reviewed April 18, 2008

A Project of the New Mexico AIDS Education and Training Centre. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org